மனமும் பணமும்

கந்தப்பன் சோம்பலை முறித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான். வாயை அகலத் திறந்து கொட்டாவி விட்டான்.

"வாயைப் பாரு, சைதாப்பேட்டை ஆறு மாதிரி" என்றாள் மங்கை.

"கழுதைங்களோட பழகிப் பழகி நீயும் கழுதை யாகிட்டே" என்று கூறிவிட்டு, கந்தப்பன் அருகே யிருந்த ஒரு சின்னக் கைக் குட்டையை எடுத்து மனைவி மீது வீசினான். அது அவள்மீது விழாமல் பக்கத்திலிருந்த கலயத்தில் போய் விழுந்தது.

"இந்தா, இதென்ன வேலை! நாளைக்கு வெள்ளை கொண்டு கொடுக்கும்போது கைக் குட்டையைக் கணக்குக் கேட்டால் என்ன சொல்லுவே? 'கலயத்திலே போட்

டுப் பொங்கித் துன்னேன்'னுவயா?" என்று கேட்டுக் கொண்டே மங்கை அச்சிறு துணியை மூலையில் அடுக்கிக் கிடந்த அழுக்கு மூட்டைகள் ஒன்றினுள் நுழைந்தாள். "மாம்பலத்திலே ரெட்டியார் வீட்டுத் துணி அது. அந்த வீட்டுப் பெண்ணு என்னைப்பிடித்து உலுக்கி விடும் தெரியுமா? அதிலேயும் பட்டுக் கைக்குட்டை. புருஷன் வாங்கிக் கொடுத்ததாய் இருக்கும்" என்று கூறினாள் மங்கை.

"மங்கை!"

"என்னா?"

"அந்தப் பொண்ணுக்குத் தலை தீபாவளி இல்லையா? நமக்கு ஏதாவது கொடுப்பாங்களா?" என்றான் கந்தப்பன், யோசனையுடன் தன் தலையைச் சொறிந்து கொண்டே.

"கொடுப்பாங்க. ஆனால், யார் கொடுத்து நமக்கு விடியப்போவுது? கடவுள் கொடுத்தாலல்ல விடியும்?" என்றாள் மங்கை. அவர்கள் பேசிக்கொண்டிருந்த போதே அவர்களுடைய ஐந்து வயதுப் பையன் ஆறுமுகம் ஓடி வந்தான்.

"அப்பா, நாலணா கொடுப்பா. பட்டாசு வாங்கணும்" என்று கெஞ்சினான் சிறுவன்.

"ஆமாம்! நாலணாவோடு ஏன் நிறுத்தினே-நாலு ரூபாய் கேட்கிறதுதானே?" என்றான் கந்தப்பன், பிள்ளையைத் தள்ளியபடியே.

"நம்ம கஷ்டம் அவனுக்கு என்னா தெரியும்? அவன் பொறந்த அப்புறம்தானே இந்தக் கஞ்சியாவது குடிச்சிக்கிட்டு இருக்கிறோம்" என்று கணவனை அடக்கி விட்டுத் தன் மகனை அணைத்து அழைத்துக் கொண்டாள் மங்கை.

"ஆமாம்! இந்தப் பையன் பிறந்த அப்புறம்தான், முதலிலே கஷ்டம் வந்து விட்டது - நினைப்பிலே வை. வெள்ளாவிப் பானை உடைஞ்சது எப்போன்னு கேட்கிறேன். அந்த வக்கீலய்யா வீட்டுத் துணி வெந்து போனது எப்போன்னு கேட்கிறேன். டாக்டர் வீட்டு மூட்டையை எலி துருவிடுச்சே அது...?"

"உங்க தலை எழுத்துக்கும் அஜாக்கிரதைக்கும் அவன் என்னா செய்வான்? அவன் என் ராஜா இல்லை! நீ போடா ஆறுமுகம். என் கண்ணு. நான் நாளைக்கு மெத்தை வீட்டு ஐயாகிட்டே கேட்டுப் பட்டாசு வாங்கித் தாரேன்" என்றாள் மங்கை.

குழந்தை ஆறுமுகம் திருப்தியுடன் ஓடிவிட்டான். ஆனால் நாலடி ஓடிவிட்டுத் திரும்பி ஓடிவந்தான். அம்மா காலணா கொடும்மா. முறுக்கு வாங்கித் துண்ணறேன்" என்று கேட்டான்.

மங்கை தன் இடுப்பிலிருந்த வெற்றிலை பாக்குப் பையை எடுத்துத் துழாவினாள். புகையிலைக் காம்புக்கு மத்தியில் ஒரு காலணாக் கிடந்தது. அவள் அதன்மீது படிந்து கிடந்த மாசைத் துடைத்து விட்டு, அதை அவனிடம் கொடுத்து அவன் வயிற்றில் ஒரு முத்தம் கொடுத்து அனுப்பினாள்.

"தின்கிறத்திற்குச் சோற்றைக் காணோமாம், உடுக்கத் துணியைக் காணோமாம். இந்த அருமைக்குக் குறைச் சல்லே!" என்றான் கந்தப்பன் ஏளனமாக.

"அருமைக்குக் காசும் பணமும் வேண்டுமா?" என்று பதிலுரைத்து விட்டு, மங்கை போய் விட்டாள்.

வண்ணான் துறைக்கு அருகே அவர்கள் வீடு கோடியில் இருந்தது. கழுதைகளைப் பிடித்துக் கட்டி

விட்டு, சட்டி பானைகளைக் கழுவி வீட்டிலிருந்த மற்ற வேலை களை சுறுசுறுப்பாகக் கவனிக்கலானாள் மங்கை.

கந்தப்பன் வந்தான். தன் மனைவி சுறுசுறுப்பாக வேலை செய்வதைக் கண்ணுற்றான். "வவுத்திலே ஒன்னும் போடாமல் இருந்தாலே உனக்கு வேலை நன்றாய் ஓடுது!" என்று அவளுடைய வாயைக் கிண்டினான்.

"அதுக்காகத் தானே நீ அப்படியே வச்சிருக்கே என்னை!" என்று பதிலுக்குக் கேட்டு விட்டுக் கடகட வென்று சிரித்தாள் மங்கை.

கந்தப்பனும் சிரித்தான். "மங்கை! நாளை மறுநாள் தீபாவளியாமே? என்னவெல்லாம் பலகாரம் சுட்டு வச்சிருக்கிறே?" என்று அவன் உண்மைபோல அவளிடம் கேட்டான்.

"அது நிறையத்தான் செஞ்சு வெச்சிருக்கிறேன். ஜிலேபி, மைசூர் பாகு, அப்புறம் பால் கோவா, முறுக்கு, ஆமவடை, அதிசரம்..."

"அடேயப்பா! விருந்து பலம்னு சொல்லு! அதெல்லாம் எங்கே இருக்கு?"

"நிறைய செஞ்சேன். வீட்டிலே வெச்சா பிள்ளை துண்ணுப்பிடுவானேன்னு யோசிச்சு, கடையிலே வச்சுப்பிட்டேன். காசைக் கொடுத்து, என் பெயரைச் சொன்னியானா மூன்றணாவுக்கு ஒரு ஜிலேபி..." என்றாள் மங்கை.

"உனக்கு வாய்தான் ரொம்பப் பெருத்துப் போச்சு! பலகாரம் முடிந்தது - ஜவுளி என்ன வாங்கினே?"

"ஊர் ஜவுளி யெல்லாம் நமதுதானே?" என்று கூறிச் சிரித்தாள் மங்கை.

கந்தப்பன் அவள் முதுகை எட்டித் தட்டப் போனான். அவள் நகர்ந்துகொண்டாள். "என்ன இது தமாஷ்! குழந்தை கேட்கிற நாலணாத் துட்டு கொடுக்க முடியாத அப்பனும், ஆத்தாளும் நாம் இருக்கோம்" என்று சட்டென்று வருந்தத் தொடங்கி விட்டாள் மங்கை.

கந்தப்பன் எழுந்தான். மறுபடியும் கையை ஆகாயம் வரை தூக்கி ஒரு முறை சோம்பல் முறுக்கி விட்டுப் பிறகு பேசலானான்: "நான் நேரே போய் ரெட்டியார் வீட்டிலே கேட்டு இரண்டு ரூபாயாவது வாங்கி வரேன்" என்றான்.

"இந்தா! வைத்திருப்பதைக் கேட்கிறாப்பலே கேட்காதே. அஞ்ச ரூபா கேளு. அப்பத்தான் இரண்டு ரூபாயாவது கொடுப்பாங்க" என்றாள் மங்கை.

கந்தப்பன் அவளுக்கு அழகு காட்டினான். "பெரிய மனுஷி! நீ தான் என்னைக் காப்பாத்தற மாதிரி! சும்மாக் கிட. நான் எல்லாம் பாத்துபேன்" என்று சற்று அதட்டி விட்டுக் கிளம்பினான்.

"சரி, சரி. போகும்போது அவுங்க வீட்டு அங்க வஸ்திரத்தையே மேலே போட்டுக்கினு, மைனர் மாதிரிப் போவாதே!" என்று தன் கடைசிப் பாணத்தை வீசி விட்டுத் திரும்பினாள் மங்கை.

கந்தப்பன் தன் தோளைப் பார்த்துக் கொண்டான். பிறகு மங்கை பார்க்காமல் இருக்கும் சமயம் பார்த்து உள்ளே போய் வேறு துணியை எடுத்து மேலே போட்டுக் கொண்டு கிளம்பினான்.

மங்கை பார்க்காமல் இல்லை. ஆனாலும் பார்க்காதது போலவே இருந்து விட்டாள். கணவன் போன பிறகு, அவள் முகத்தினின்று சிரிப்பு மாறியது. கவலையும் துயரமும் வந்து கௌவிக் கொண்டன. "இந்த ஜன்மத்துக்

கண்டம்தானா எழுத்து?" என்று கடவுளைக் கேட்டுவிட்டு பதிலை எதிர்பாராது அவள் மேலே வேலையைக் கவனித்தாள். அவள் வாழ்வில் குறுக்கிட்ட பல இன்னல் களும் அவள் மனக்கண் முன் தோன்ற ஆரம்பித்தன. அவைகளைத் தனக்குத்தானே மானசீகமாக விவரித்துக் கொண்டே, அவள் குடிசைக்குள் புகுந்தாள். ஒவ்வொரு பானையாக எடுத்து, குனிந்து குனிந்து பார்த்தாள். அவை எல்லாம் காலியாகவே இருந்தன.

"உப்புத்தான் இருக்கிறது! தண்ணிலே கரைச்சுக் குடிக்கிறதா? அட கடவுளே! ஒரு குழந்தை; அதுக்குக் கூட வயிறாரப் போட வழியில்லையே? ஹும். இந்த நாலு மாவைப் போட்டுக் கஞ்சி காய்ச்சி ஆறு முகத்துக்குக் கொடுத்துவிட்டு...

துணிகளுக்குக் கஞ்சி போடுவதற்காக அன்று யாரோ அரிசி நொய் கொடுத்திருந்தனர். அதைக் குழந்தைக்குக் கொடுத்து விட்டால் அன்றையப் பொழுது கழியும் என்று அவள் நினைத்தாள்.

"ஒண்ணா வந்தது?" என்று மறுபடியும் துன்பப்பட்ட தன் மனத்தையே அவள் கேட்டுக் கொண்டாள்.

மங்கையும் கந்தப்பனும் ஏழைப் பெற்றோர்களுக்குப் பிறந்தவர்கள். அவர்கள் நிலையும் ஏழ்மையை விட்டு மேலே எழவே இல்லை. சற்று தலை தூக்கும் நேரத்தில் கடவுள் அடித்துக் கொண்டே இருந்தார். மங்கையின் மனத்தில் கரைகாணாத ஏக்கம் குடிகொண்டது. ஆனால், அவர்கள் தாழ்ந்த நிலையிலும் அவர்களிடம் சிறந்த குணங்கள் இருந்தன. பரஸ்பரம் ஆழ்ந்த அன்பு இருந்தது. மற்றும் நல்ல ஹாஸ்ய உணர்ச்சியும் இருந்தது. எப்பொழுதும் ஏதோ வியைாட்டாகப் பேசிக் காலந் தள்ளுவார்கள். எப்பொழுதும் ஒருவர் முன் ஒருவர் சிரித்த படியே இருப்பார்கள்.

கந்தப்பன், ரெட்டியார் வீட்டைத் தேடிச் சென்றான். அவனுடைய அதிருஷ்டம் அன்று சரியாக இல்லை. தீபாவளிக்கு மாப்பிள்ளை வரமுடியாது என்று எழுதி விட்டாராம். கந்தப்பனுக்கும் அவர்களை மேலும் தொந்தரை செய்ய மனமில்லை. அவன் வீடு திரும்பிட் டான். "போகும்போதே ஒரு பொம்பளை குரைச்சுகிட்டே இருந்தா. எப்படிக் காரியம் ஆகும்?" என்று அவன் மங்கை மீது பழியைச் சுமத்தினான்.

"ஆமாம்! அவுங்க வீட்டுத் துணியை மேலே போட்டுகுனு போகப் பாத்தியே? நான் குலைக்கா விட்டால் நீ அடி பட்டுக் கொண்டுதானே வந்திருப்பே?" என்றாள் மங்கை. கந்தப்பனின் முகத்தில் அசடு வழிந்தது. "நீ பார்த்துப் பிட்டியா? நீ போய் எங்காவது பணத்திற்குப் பார்த்து விட்டு வாயேன்" என்றான் அவன்.

மங்கை உதட்டைப் பிதுக்கினாள். "எல்லாம் பார்த்துட்டேன். எல்லோரும் கையை விரிக்கிறாங்க. நம்ம கிட்ட துணி போடுகிறவங்க நம்பளைப் போல ஆளுங்க. அவுங்க அவுங்க குடுபத்துக்குப் போதாமல் அலைய றாங்க" என்றாள்.

"அப்போ நம்ம தீபாவளி?"

"தீபாவளியா? ஊரெல்லாம் அன்னிக்குப் புசித்துக் கிட்டே இருப்பாங்க. நம்ம பசித்துக் கிட்டே கிடப்போம்" என்று சாவதானமாகப் பதிலளித்தாள் மங்கை.

"ஐய! குழந்தைக்குக் கூட..."

"சாப்பிடற தாலத்தை வச்சி எட்டணா வாங்கு. அவனுக்குத் தீபாவளி வந்து விட்டுப் போகுது" என்றாள் மங்கை.

"மங்கை!"

"ஏன்னா?"

"இப்ப திடீரென்று உன் கையிலே காசு வந்தா என்ன செய்வே?"

"வீடு கட்டுவேன், மாடு வாங்குவேன், நிலம் வாங்குவேன், சலவைக் கடை வைப்பேன்... அட, காசு கிடைச்சா செலவா செய்யத் தெரியாது?" என்று அசட்டை யாகப் பதிலளித்தாள் மங்கை.

"நான் நல்ல மாட்டு வண்டி வாங்கி உன்னையும் ஆறுமுகத்தையும் அதில் வைத்து ஊர்கோலம் வருவேன். நீ செய்து வைத்திருக்கிறாய் பாரு, மிட்டாய், அதைக் கடையிலிருந்து வாங்கி, கூடை நிறைய வைத்துக் கொண்டு..."

"அப்பா!" என்று கூவிக்கொண்டே வந்தான் ஆறுமுகம்.

"என்னடா? உனக்கு என்ன வேண்டும் சொல்லு. உங்க அப்பாவுக்கு ரூபா வரப்போவுது..." என்றான் கந்தப்பன்.

"சைக்கிள்-ரிக்ஷா."

"சரிதான், மங்கை உன் பிள்ளை பெரிய அடி போட்டான் பார்த்தியா?" என்றான் கந்தப்பன்.

"இப்படியே சலவைத் தொழிலிலே வயிறு காய்ந்து கிட்டு வந்தால் ரிக்ஷா இழுக்க வேண்டியதுதான்!" என்றாள் மங்கை.

"அட, சும்மா இரு. பண்டிகை அன்றைக்கு ஒன்றும் பேசாதே" என்று அடக்கினான் கந்தப்பன்.

அன்று இரவு ஊரெல்லாம் வாண வேடிக்கைகளுடன் கோலாகலமாக இருந்தது. கந்தப்பனும் மங்கையும் காய்ந்த வயிறும் சிரித்த முகமுமாகத் தங்கள் அருமை மகனை அழைத்துக்கொண்டு தெருவில் வேடிக்கை பார்த்துவிட்டு வந்தனர்.

விடியற்காலையில் எழுந்ததுமே ஆறுமுகம் ஆயிரம் சாமான்கள் கேட்டான். தங்கள் மனக் கஷ்டத்தை அடக்கிக் கொண்டு அவனுக்குச் சமாதானமாக பதிலளித்தனர் பெற்றோர். அன்று பிற்பகல் வாடிக்கை இடங் களுக்குச் சென்றுவிட்டு வந்ததில் தீபாவளி இனாமை வைத்துக் கொண்டு அன்று காலட்சேபம் நடந்தது.

அன்று பகல் வெய்யில் நேரத்தில் இருவரும் உறங்கிக் கொண்டிருந்தனர். யாரோ வாயிற் கதவைத் தட்டும் சத்தம் கேட்டு எழுந்து வந்து கதவைத் திறந்தான் கந்தப்பன். மங்கையும் எழுந்து வந்தாள்.

“கந்தப்பா, உன்னைத் தேடிக்கிட்டு பெரியவர் ஒருவர் வந்திருக்காரு. இந்த தீபாவளி நல்ல தீபாவளியடா உனக்கு. உன் கஷ்டம் தீர்ந்தது இன்றோடு. எங்களை யெல்லாம் மறந்து விடாதே” என்று அவர்களுள் பெரிய மனுஷரான கோவிந்த அண்ணன் சொன்னார்.

“கந்தப்பனும் மங்கையும் கனவு காண்பவர்கள் போல் ஒன்றும் புரியாமல் விழித்தனர். பிறகு, வந்த பெரிய வரைக் காணச் சென்றனர்.

கோவிந்த அண்ணன் கூறியபடியே கந்தப்பனையும் மங்கையையும் அதிருஷ்ட தேவதை தேடி வந்துவிட்டாள். வெகு நாட்களுக்கு முன்பு வீட்டை விட்டுத் தெலுங்கு தேசத்திற்கு ஓடிவிட்டிருந்த அவனுடைய சிற்றப்பா ஒருவர் அவன் பெயருக்கு ஒரு சலவைக் கடையையும் கொஞ்ச நிலமும் வைத்துவிட்டு இறந்துவிட்டாராம்.

"நான் சொன்னால் சொன்னது தான், ஏன் மங்கை?" என்று கூறிக் கந்தப்பன் மார்பு தட்டிக் கொண்டான்.

அன்றிரவு அங்கிருப்பவர்கள் எல்லோருமாகக் கூடி, கந்தப்பன் குடும்பத்திற்கு விருந்தளித்தனர். சொத்து கந்தப்பனின் கைக்கு வருவதற்கு ஒரு மாதமாகிவிட்டது. ராஜமகேந்திரவரத்தில் இருந்த சலவைக் கடையை விற்றுவிட்டான் கந்தப்பன். கிடைத்த தொகையை வைத்துக்கொண்டு சைதாப்பேட்டையிலேயே ஒரு சிறிய கடை ஆரம்பித்தான் அவன். வேறு வீடு ஒன்றிற்குப் போக வேண்டும் என்று அவனுக்கு ஆசை. ஆனால் மங்கை அதற்குச் சம்மதிக்கவில்லை.

"துணிகளைக் கடையில் வைத்தால் போகிறது. இந்த வீட்டைத் தேடித்தானே அதிருஷ்டம் வந்தது. இதை விடக் கூடாது" என் அவள் பிடிவாதம் பிடித்தாள். அதன்படியே அவர்கள் மெதுவாக அந்த வீட்டையே சரிப்படுத்திக் கொண்டு அங்கேயே இருந்தனர். கடவுளின் கருணையை நினைத்து நினைத்து பெருமிதம் அடைந்தனர். அவர்கள் அன்பு மேலும் வளர்ந்தது. எல்லாம் கொஞ்ச நாட்கள்தான்.

* * *

மங்கை தலைமீது வைத்த கையை வாங்காமலே உட்கார்ந்திருந்தாள். "என்ன மனசோடு அந்தக் கிழவன் சொத்தைக் கொடுத்தானோ தெரியவில்லையே, எப்படிச் சம்பாதிச்ச சொத்தோ?" என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள்.

அன்று அவளுக்கும் கந்தப்பனுக்கும் சண்டை வந்து விட்டது. இப்பொழுதெல்லாம் தினமும் அநேகமாக அப்படித்தான். நிலத்திலிருந்து ஆறுமாத சாப்பாட்டிற்கு

நெல் வந்தது. சலவைக் கடையும் செழிப்பாக நடக்கவும் அவர்கள் நிலை மிகவும் முன்னேறியிருந்தது. உணவுக் கும், ஆடைக்கும் பஞ்சமில்லாமல் இருந்தது. ஆயின் முன்பு நிறையக் கிடைத்து அன்புறவுக்கும் அமைதிக்கும் பஞ்சம் வந்துவிட்டது.

கந்தப்பன் பணத்தைச் சரியாகச் செலவிடுவதில்லை என்பது மங்கையின் அபிப்ராயம். மங்கை அநாவசிய மாகக் குறுக்கிடுகிறாள் என்பது கணவன் கருத்து.

அன்று மங்கை சலவைத் துணிகளைக் கொண்டு ராயபுரத்தில் ஓரிடத்தில் கொடுத்துவிட்டு வந்தாள். திரும்பும்போது வெகு நேரமாகிவிட்டது. கந்தப்பன் அவளைக் கண்டித்தான்.

"என்றைக்கு மில்லாத சந்தேகம் என்ன உனக்கு? நான் கடையைப் பார்த்துக்க மாட்டேனா? நீதான் ஆண் பிள்ளையாகப் போய்விட்டு வருவதுதானே?" என்றாள் மங்கை.

மங்கையின் கழுத்திலும் கைகளிலும் நகைகள் ஏறியிருந்தன. ஆனால் அவள் முகத்து குறுநகை மறைந்து எக்காலமோ ஆகிவிட்டது. கவலையின்றிக் கிடந்த அவள் மனசில் கவலைகள் வந்து குவிந்து கொண்டன.

"கடையைச் சரியாகப் பூட்டினீங்களா?" என்று கேட்டாள் மங்கை.

"உன் வேலையைப் பார்த்துக்கிட்டு நீ போ. என் வேலையை நான் பார்த்து கொள்வேன்" என்றான் கந்தப்பன் கோபமாக.

முன்பாக இருந்தால், மங்கை அதற்கு ஒரு சிரிப்புச் சிரித்துவிட்டு "என் வேலை உன்னைப் பார்கிறது தானே?"

என்று கேட்டிருப்பாள். இப்பொழுது அவள் பேசாமல் கவலையுடன் திரும்பினாள். பழையபடி பேசினாலும் அது கந்தப்பனுக்குச் சரியாகப்படுவதே இல்லை. மேலும், கூடவே வேறு ஒரு கிலியும் மங்கைக்கு வந்து சேர்ந்து கொண்டது.

ஒரு நாள் கந்தப்பன் அவளிடம் வந்து மிகவும் அன்பாக நடந்து கொண்டான். மங்கை மனம் மகிழ்ந்து அவனுடன் குலாவினாள்.

"மங்கை, நீ போட்டிருக்கிற சங்கிலியைக் கொடேன்" என்று கேட்டான் கந்தப்பன் கடைசியில்.

"ஏன்?"

"கடையிலே கொஞ்சம் கடனாகிவிட்டது. இதை வைத்துப் பணம் வாங்கி கடனைக் கொடுத்து விட்டால் அடுத்த மாசம் திருப்பிக் கொள்ளலாம்."

"கடையிலே ஏது கடன்?"

"கடனாகிவிட்டது என்று நான் சொல்கிறேன்!" என்று அதட்டினான் கந்தப்பன்.

மங்கையின் கண்களில் நீர் துளிர்த்து விட்டது. அவள் பேசாமல் சங்கிலியைக் கழற்றிக் கொடுத்து விட்டாள். எப்படியோ கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தவர்கள் கடவுள் கிருபையில் நல்ல நிலை வந்திருக்கும் போது அதற்குள் வாழ்க்கை நடத்தாமல் கந்தப்பன் கடன் வாங்க ஆரம்பித்தது அவள் மனதை மிகவும் வாட்டிவிட்டது.

'யார் கிட்டே கடன் வாங்கிவிட்டாரோ? எவனாவது காபூலிக்காரன் கிட்டே வாங்கிவிட்டாரா? அவன் மானத்தை பார்க்காமல் கறந்து விடுவானே?' என்று அவள் கவலைப் பட்டுக் கொண்டிருந்தாள். நாழிகை

செல்லச் செல்ல அவள் கவலை பீதியாக மாறியது. வீட்டில் இருக்க முடியாமல் கடையை நோக்கி நடந்தாள்.

'சங்கிலியை வைத்துக் கடன்வாங்க முடிந்ததோ இல்லையோ? அந்த ஸேட் படுபாவி கடைக்கு முன்னே நிற்கிறாரோ? என்ன கஷ்டமடா இது! கடவுளே! கடவுளே!' என்று தவித்துக் கொண்டே அவள் நடக்க மாட்டாமல் நடந்து சென்றாள்.

கடையின் முன் அவள் எதிர்பார்த்தபடி ஒரு கூட்டமும் இல்லாததைக் கண்டு சற்று ஆறுதலடைந்து அவள் வேகமாகக் கடையினுள் நுழைந்தாள். முன்னாடிப் போட்டிருந்த ஒரு பெஞ்சின் மீது ஒரு பெண்மணி உட்கார்ந் திருந்தாள். கந்தப்பனைக் காணோம். மங்கை அப்பெண்ணைத் தாண்டி உள்ளே போக எண்ணினாள். சட்டென்று மங்கையின் கண்களில் தன் சங்கிலி அப்பெண்ணின் கழுத்தில் பளிச்சிடுவது தெரிந்தது. அவள் நெஞ்சு திக்கென்றது. கண்களில் நீர் முட்டிற்று. பேசாமல், திரும்பிப் பாராமல் அவள் வீடு வந்து சேர்ந்து விட்டாள். கணவன் வந்து சேரும்வரை கற்சிலைபோல் உட்கார்ந் திருந்தாள்.

கந்தப்பன் உல்லாசமாக ஒரு சினிமாப் பாட்டைப் பாடிக் கொண்டு ஆறுமுகத்தைக் கையில் பிடித்துக் கொண்டு வந்தான். மங்கை அவர்களுக்குச் சோறு போட்டு விட்டுத் தான் மட்டும் பசியோடு படுத்துவிட்டாள்.

"மங்கை, நீ சோறு தின்னவில்லையா? பழைய வாசனை இன்னும் போகலை போலிருக்கு?" என்று கேலி செய்துவிட்டுக் கடகடவென்று சிரித்தான் கந்தப்பன்.

"பழைய நினைப்பெல்லாம் மறந்த நன்றிகெட்டவள் நானில்லை" என்று பதிலளித்தாள் மங்கை.

"என்ன சொல்றே நீ?" என்று கேட்டான் கந்தப்பன்.

" 'கடையிலே கடன்'னு பொய் சொல்லி என்னை ஏமாற்றி, கழுத்து நகையைப் பிடுங்கிக் கொண்டுபோய் எவளுக்கோ கொடுத்தியே? பழைய நினைப்பு இல்லாத நன்றிகெட்ட ஜன்மம் நீதான்னு சொன்னேன்" என்றாள் மங்கை. அதற்குமேல் அவளால் தாக்குப் பிடிக்க முடிய வில்லை. குலுங்குகிக் குலுங்கி அழ அரம்பித்தாள்.

"நீதான் புத்திகெட்ட நாய். யார் பேச்சைக் கேட்டுக் கொண்டு உளறுகிறாய்?" என்று கர்ஜித்தான் கந்தப்பன்.

"என் கண்ணாலே பார்த்ததற்கு யார் பேச்சு வேண்டும்?" என்று முனகிக்கொண்டே அவள் அழுதாள்.

இப்படியே பேச்சு வளர்ந்தது. கந்தப்பனுக்குக் கோபம் தலைக்கு ஏறியது. அவளைக் கை ஓங்கி அடித்து விட்டான் அவன். பிறகு தன் கடையை நோக்கி நடந்து சென்றான். இரவு முழுவதும் அவன் திரும்பியே வர வில்லை. மங்கை இரவெல்லாம் உறக்கமின்றி அழுது கொண்டே இருந்தாள்.

காலையில் எழுந்ததும் வேலைமீது மனசு இல்லாமல் உட்கார்ந்திருந்தாள்.

கோவிந்த அண்ணனின் மனைவி அவளிடம் வந்தாள். "விடிஞ்சா தீபாவளி. பணியாரம் சுடலாம்னு பார்த்தேன். உன்கிட்டே நல்ல உலக்கை இருக்கிறதா?" என்று அவள் கேட்டாள். பிறகு மங்கையின் சோர்வுற்ற முகத்தைக் கண்டுவிட்டு விஷயத்தை விசாரித்து அறிந்து கொண்டாள்.

"இதுக்காக துக்கப்பட்ட வீடு மாதிரி பிலாக்கணம் பாடப் போகிறாயா? எழுந்திரு. புருஷன் கோவிச்சுக்கிட்டு போனால், திரும்பி வரும் போது வீட்டை நல்லா

வைத்திருந்தால் வருவானா, இப்படிக் கிடந்தால் நுழையப் பிடிக்குமா அவனுக்கு?"

இந்த உபதேசத்தை மங்கை இலேசில் கேட்டுக் கொள்ளவில்லை. "அண்ணி, அந்த ஆளு முகத்திலே இனி முழிக்க மாட்டேன்" என்றாள் அவள்.

"முழிக்காமல் என்ன செய்யப்போகிறாய்? தப்பு செய்யறதுதான். உனக்குப் புருஷன் முக்கியமானால் இப்படிக் கிடக்காதே. நான் அவ்வளவுதான் சொல்லு வேன்" என்று புத்திமதி கூறிவிட்டு கோவிந்த அண்ணன் மனைவி, உலக்கையுடன் போய் விட்டாள்.

மங்கை அப்படியே உட்கார்ந்திருந்தாள். ஆறுமுகம் வந்து மடியில் உட்கார்ந்தான். "அம்மா எனக்குப் பட்சணம்?" என்று கேட்டான்.

முன் தீபாவளியன்று தாங்கள் இருந்த நிலை, மங்கைக்கு நினைவிற்கு வந்தது. அவள் பெருமூச்சு ஒன்றை அடக்கிக்கொணடாள். ஆறுமுகம் நச்சரித்தான். பிறகு கோவிந்த அண்ணன் மனைவியின் புத்திமதியும் மெள்ள மெள்ள அவள் மனசுக்கு எட்டியது. அன்பாக இருந்த கணவனுக்காகப் போராடாமல் விடவும் அவளுக்கு மனமில்லை. அவள் எழுந்தாள். வீட்டைப் பளபளவென்று துடைத்துக் கோலம் போட்டாள். கடைக்குப் போய் ஒரு ரூபாய்க்கு வெகு நாட்களாக ஆசைப்பட்ட பட்சணங்களை வாங்கிக் கொண்டு வந்தாள். தலை பின்னி, முகம் கழுவிக் கொண்டு, இரவு உணவைச் சரிப்படுத்தி எடுத்து வைத்தாள்.

விளக்கு வைத்ததும் கந்தப்பன் வந்தான். அவன் கையில் சிறு மூட்டை ஒன்று இருந்தது. "மங்கை, மனசு குளிர்ந்ததா?" என்று அவன் கேட்டான்.

அவனது கேலிப் பேச்சு அவள் மறந்திருந்த சினத்தைக் கிளப்பியது. அதனால் அவள் பேசாமல் அவனைப் பார்த்தாள்.

கந்தப்பன் அவளை நெருங்கினான். "போன தீபாவளி நினைவு இருக்குதா?" என்று கேட்டான்.

தலையை ஆட்டினாள் மங்கை.

கந்தப்பன் அவள் முகத்தைத் தன் பக்கம் திருப்பிக் கொண்டு பேசினான்.

கல்யாணமானது முதல் ஒரு நாள் கூட அடிக் காதவன் இன்று அடித்து விட்டுச் சென்றதும் அவனுக்கு மனம் என்னவோ செய்ததாம். போன தீபாவளியிலிருந்து அன்று வரை யோசனைகள் ஓடினவாம்.

"முன்னே பின்னே யோசியாமல் நீ வந்து என்னை வேறே பொம்பளைகிட்ட பிரியம் வைச்சவன்னு சொன்னதும் கோவம் வந்திடுச்சு, மங்கை" என்று கந்தப்பன் கூறவும் மங்கை சீறினாள்.

"பின்னே எப்படிச் சங்கிலி..."

"இரேன், நான் அந்தப் பொம்பளையோட புருஷன் கிட்டே தான் சங்கிலியை அடகு வைச்சேன். அந்த ஆளு டீக் கடைக்குப் போனாரு. அப்போ அந்தப் பொம்பளை நம்ம கடையிலே உட்கார்ந்திருந்தது. அதைப் பார்த்தது நீ... என்கிட்டே உனக்கு நம்பிக்கையில்லாமல் போயிடுச் சென்று எனக்கு வருத்தம். உன்னை அடிச்சுப்பிட்டேன். ரொம்ப வலிக்குதா, மங்கை?" என்று அன்புடன் கேட்டான் கந்தப்பன்.

மங்கைக்குத் தன் செய்கையைக் குறித்து வெட்கம் பிடுங்கித் தின்றது. அவள் பேசாமல் தலை குனிந்தாள்.

பிறகு கந்தப்பன் ஜவுளி மூட்டையைப் பிரித்துக் காட்டினான்.

"இந்த நன்றி கெட்டவளுக்கா?" என்று மெல்லக் கேட்டாள் மங்கை.

"அப்படிச் சொல்லாதே" என்றான் கந்தப்பன்.

"முன்னே சொன்ன பட்சணங்கள் வாங்கி வந்தேன்" என்று மங்கை சிரித்துக்கொண்டே காட்டினாள்.

கந்தப்பனும் சிரித்தான்.

அப்பொழுது யாரோ "கந்தப்பா" என்று அழைப்பதைக் கேட்டு அவன் வெளியே வந்தான். மங்கையும் கூட வெளியே வந்தாள்.

முன்பு வந்திருந்த அதே பெரியவர் கந்தப்பனை அழைத்து ஏதோ பேசினார். கந்தப்பன் ஏதோ சொன்னான். மங்கைக்கோ ஒன்றும் புரியவில்லை. அவள் காத்து நின்றாள். திரும்பும் போது கந்தப்பனின் முகம் வாடிக் கிடந்தது.

"என்ன?" என்று கவலையோடு விசாரித்தாள் மங்கை.

கந்தப்பன் இடிந்து போயிருந்தான், பெரியவர் பக்கமாகக் கையைக் காட்டிவிட்டுப் பேசாமல் தலை குனிந்து இருந்தான். மங்கை பெரியவர் முகத்தைப் பார்த்தாள்.

"கோதாவரியில் ஆவணி மாசத்தில் வந்த வெள்ளத்திலே உங்க நிலமெல்லாம் மணல் மேடிட்டுப் போய்விட்டது. அதைச் சரிப்படுத்தப் பார்த்தேன். முடியவில்லை. அதுவேறு கடனாகிவிட்டது. உங்க சிற்றப்பன் சினேகத்துக்காகச் செய்தேன். பலனில்லாமல் போய் விட்டது. என் சொத்தும் போய்விட்டது" என்றார் பெரியவர்.

கந்தப்பன் மங்கையின் முகத்தைப் பார்த்தான். அவள் அவன் முகத்திலிருந்த கலவரத்தைப் பார்த்ததும் புன்னகை பூத்தாள்.

"இதுக்குக் கவலைப்படுவாங்களா? சும்மாத் தள்ளுங்க. இந்தச் சொத்து வந்தது முதல் நமக்கும் நிம்மதியே இல்லை. போனல் போவுது" என்றாள் மங்கை.

பெரியவர் ஆச்சரியத்துடன் மங்கையை நோக்கினார்.

"இவருக்கு நூறு ரூபா கொடுக்கணுமே?" என்றான் கந்தப்பன்.

மங்கை ஒரு கணம் யோசித்தாள். பிறகு கணவனின் செவிகளில் ஏதோ சொல்லிவிட்டுத் தன் கையிலிருந்து இரு பொன் வளையல்களையும் கழற்றிக் கொடுத்து விட்டாள். அவளுடைய பெருந்தன்மையை வெகுவாக மெச்சிவிட்டுப் போய்விட்டார் பெரியவர்.

அவர் போனபிறகு கந்தப்பனும் மங்கையும் தனிமையில் இருந்தனர்.

"மங்கை, உன் புடவையை இப்பவே பிரிச்சு உடுத்தி விடு. அதற்குக் கூட பிறகு என்ன வந்துவிடுமோ? எப்படி நம் தீபாவளி?" என்று வேதனை மிகுந்த குரலில் வேடிக்கை செய்தான் கந்தப்பன்.

"எனக்கு ஒன்றுமே வேண்டாம். காசு நமக்கு என்னத்தை சாதிச்சுடுத்து? உங்க பிரியம் இருந்தால் அதுவே போதும்" என்றாள் மங்கை.

"அதுதான் மிஞ்சும் போல் இருக்கிறது. சங்கிலியை நான் எப்படி மீட்டப் போகிறேன்? நிலமும் இல்லை என்று ஆச்சு, கடையாவது தங்குமோ, பழையபடி தன் நான் தா னந்தா னோவோ?" என்றான்.

"எனக்குப் பழைய தன்னான்னாவே போதும். அப்போ நீ என்கிட்டேயே இருக்கே" என்று கொஞ்சினாள் மங்கை.

கந்தப்பன் மனைவியின் அருகில் நகர்ந்து உட்கார்ந்தான். ஆறுமுகம் எங்கிருந்தோ ஓடிவந்து அவர்கள் மடியில் தொப்பென்று விழுந்தான். மூவரது முகமும் அப்பொழுது மத்தாப்புக் கணைப்புப் போல் பளிச்சென்றிருந்தது.

(குண்டூசி–தீபாவளி மலர், 1953)
